இலங்கை திறந்த பல்கலைக்கழகம் - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடன்பான தொடர்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 22 ஆம் பந்தியின் பிரகாரம் கட்டிடங்களை மீள ஸ்தாபிப்பதற்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 18,445,093 தொகை கட்டிடக் கணக்கில் மூலதனமாக்கப்படாமல் செலவினமாகக் கணக்கீடு	மின்சார வயர்களை அமைத்தல் மற்றும் இறாக்கைகளைப் பொருத்துவதற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 7,715,487 மற்றும் ரூபா 369,410 மூலதனமாக்கப்படாமை பிழையாக இல்லாதிருந்ததை	செலவனத்தின் தன்மையை சரியாக இனங்கண்டு மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

செய்யப்பட்டதன் காரணமாக கட்டிடக் கணக்கின் மீதி ஆண்டின் மிகை அப் பெறுமானத்தால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக் கொள்வதுடன் ஏனைய செலவினங்கள் கட்டிடத்தை பழுதுபார்த்தல் செலவினமாக இருந்தமையால் கடந்த கால கிரயமாகக் கருதி இழிவுப் பெறுமதி சேர்த்தலாக இனங்காணப்படவில்லை.	
(ஆ) இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 10 இன் 19 ஆம் பந்தியின் பிரகாரம் சேவை வழங்குதலை உள்ளடக்கிய கொடுக்கல் வாங்கல்களின் விளைவுகள் நம்பிக்கையானதாக மதிப்பீடு செய்யக் கூடிய வகையில் அறிக்கையிடப்படுகின்ற திகதியின் போது கொடுக்கல் வாங்கல்களின் ஒட்டு மொத்த நிலைமையைக் கவனத்தில் கொண்டு கொடுக்கல் வாங்கலை சார்ந்த வருமானங்களை இனங்காண வேண்டியிருந்ததுடன் அல்லது 24 ஆம் பந்தியின் பிரகாரம் குறித்துரைத்த கால அட்டவணையில் (வீச்சில்) நேர் கோட்டு முறையின் அடிப்படையில் வருமான செலவினங்கள் இனங்காணப்படல் வேண்டும். அதற்கு முரணாக சுய நிதியீட்டல் பாடநெறியில் இருந்து கிடைக்கும் வருமானம் மற்றும் செலவினங்கள் அந்தப் பாடநெறிக்குரிய காலப் பகுதியின் போது இனங்காணாமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் முன்னர் நடாத்தப்பட்ட குறுகிய காலப் பாடநெறி வருமானமாக ரூபா 387,379,120 மீதி ஒன்று நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.	பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 99 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக நிதியம் ஸ்தாபிக்கப்பட்ட நிதியம் ஒன்றாக இருந்ததுடன் 101 ஆம் பிரிவின் கீழ் உபகணக்குகளில் பேணிச் செல்லும் அதிகாரம் காசாளருக்கு சொந்தமாக இருந்தமை மற்றும் அதனால் நியதிச் சட்டம் அல்லாத நிதியம் எதுவும் பல்கலைக் கழகத்தில் காணப்பட வில்லை. பல்வேறு முறையில் கிடைக்கின்ற நிதியங்களைக் கணக்கு வைக்கும் போதும் சகல பல்கலைக்கழகங்களும் ஒரே வகையான ஏற்றுக் கொள்ளல்களை பின்பற்றாது இருந்தமையால் அது தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்காக பல்கலைக் கழக மாணியங்கள் ஆணைக்குழு காசாளருடன் கலந்துரையாடப்பட்டதுடன் அது தொடர்பாக புதிய சுற்றறிக்கை ஒன்றை விநியோகிப்பதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது.	வருமானம் மற்றும் செலவினங்களுக்கு உரிய காலப் பகுதியின் போது இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மாணவர் உதவி வழங்குவதற்காக பல்கலைக் கழகத்தின் பாடநெறிக் கட்டணத்தில் வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற 4 சதவீத அளவு	எதிர்காலத்தில் சரி செய்யப்படும்.	ஆண்டின் செலவினங்கள் உரிய காலப் பகுதியில் சரியாக இனங்காணப்படல் வேண்டும்.

ஆண்டின் செலவினமாகக் இனங்காணல் பல்கலைக்கழகத்தின் கொள்கையாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மாணவர் உதவி வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 64,482,000 தொகை ஆண்டின் செலவினத்திலும் மற்றும் மாணவர் உதவித் தொகை நிதியத்திலும் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமான ஆண்டின் மிகை மற்றும் மாணவர் உதவி நிதியம் அந்த அளவினால் முறை அதிகரித்தும் மற்றும் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் 2016 மார்ச் 01 ஆந் திகதிய இலக்கம் 04/2016 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் சுய நிதியீட்டல் வருமானத்தில் அபிவிருத்தி நிதியத்திற்கான பங்களிப்பு பல்கலைக் கழக நிதியத்திற்கு மாற்றும் உரிமை மூலதன மாற்றக் கூற்றின் மூலம் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதற்கு இணங்காத வகையில் மீளாய்வாண்டின் போது அபிவிருத்தி நிதியத்தின் பங்களிப்பாக ரூபா 64,143,842 நிதிச் செயலாற்றல் கூற்றில் செலவினமாக சீராக்கப் பட்டமையால் ஆண்டின் மிகை மற்றும் திரண்ட மீண்டெழும் நிதியம் அந்த அளவினால் முறையே குறைத்தும் மற்றும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.	பல்வேறு முறைகளில் கிடைக்கின்ற நிதியங்களைக் கணக்கு வைக்கும் போது சகல பல்கலைக்கழகங்களும் ஓரே வகையான நடைமுறைகளை பின்பற்றுவதற்கு புதிய சுற்றறிக்கை ஒன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரால் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	பல்கலைக்கழக நிதியத்திற்கு மாற்றுதல் உரித்து உறுதி உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றின் மூலம் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் நிலையான வைப்புக்களில் இருந்து உழைக்கப்பட்ட ரூபா 44,708,669 வட்டி வருமானம் நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமாக இனங்காணப்படாமல் நேரடியாக நிதியத்தின் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.	மேற்படி	ஆண்டிற்குரிய சகல வருமானங்களும் ஆண்டின் வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 8,024,655 மிகை ஒதுக்கீடுகள் முன்கொண்டு வரப்பட்ட இலாபத்தில் சீராக்கப்படாமல் மீளாய்வாண்டின் செலவினங்களில் குறைத்துக்	2025 இன் நிதிக்கூற்றுகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமத்தின் பிரகாரம் ஒதுக்குவதற்காக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

	காணப்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் திரண்ட நிதியம் திரண்ட மிகை அப்பெறுமானத்தால் முறையே குறைத்தும் மற்றும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.		
(ஈ)	சுகாதார மருத்துவ பீடத்தின் 5மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு உரிய 2019 ஆம் ஆண்டில் முதலாவது வரைபடத் திட்டத்தில் குறைக்கப்பட்ட முதலாவது பட்டியலில் குறைக்கப்பட்ட ரூபா 3,239,672 நிறுத்தி வைத்தல் தொகை கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலை கணக்கு மற்றும் நிறுத்தி வைத்தல் மீதி அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	சரி செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	நிறுத்தி வைத்தல் பணத்தை சரியாகக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	அச்சகத்தால் ஏனைய நிறுவனங்களுக்காக அச்சிடல் நடவடிக்கைகளை நிறைவேற்றி வழங்கியதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் கிடைக்கப் பெற்ற ரூபா 1,204,594 ஆன முற்பணம் உரிய பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் போது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக திரண்ட மிகை மற்றும் முற்பணம் அப் பெறுமானத்தால் முறையே குறைத்தும் அதிகரித்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.	உரிய கணக்குகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பணிகள் நிறைவு பெற்ற உடன் முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 932,483,803 ஆன பெற வேண்டிய மாணவர் வருமானத்திற்கு உரிய காலப் பகுப்பாய்வு ஒன்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.	OMIS கணனி முறைமையில் 400,000 இற்கு குறையாத மாணவர் எண்ணிக்கையின் தகவல்கள் உள்ளடக்கப்படுகின்றமையால் அந்த முறைமையில் உள்ள குறைபாடுகளின் அடிப்படையில் சரியான காலப் பகுப்பாய்வை வழங்குவதற்கு முடியாது இருந்தது.	காலப் பகுப்பாய்வு தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	09 முதல் 32 வருடங்கள் வரை பழைய சேவையை விட்டுச் சென்ற 07 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 485,128 இடர் கடன் மீதி உரிய உத்தியோகத்தர்களிடம் இருந்தோ அல்லது பிணையாளர்களிடம் இருந்தோ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஊழியர் சேமலாப நிதியம் விடுவிக்கும் பத்திரம் நிதிப்பிரிவிற்கு கிடைத்த உடன் அவர்களின் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் விடுவிக்கும் பத்திரம் ஏனையவர்களின் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தீர்த்த வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2018 முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக செலுத்த வேண்டிய ரூபா 16,220,166 தொகையை தீர்த்து வைக்காமல் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் அண்டின் போது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செலுத்த வேண்டிய பணத்தை செலுத்தி விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமானங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2019 யூலை 29 ஆம் திகதியி இலக்கம் 04/2019 என்ற பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு உள்ளகக் கணக்காய்வு சுற்றறிக்கை	விடயப் பொறுப்பு அமைச்சரினதும், நிதி அமைச்சரினதும் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் பல்கலைக்கழகத்தால் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,315,778,764 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.	திறைசேரி அங்கீகாரம் பெறப்படும் வரை குறுங்கால முதலீடு தாமதம் அடைந்தமையினால் திறைசேரி உத்தியோகத்தர்களின் ஆலோசனையின் அடிப்படையில் முதலிடும் சந்தர்ப்பத்தின் போதும் திறைசேரி அங்கீகாரத்திற்காக கோரிக்கைக் கடிதம் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.	நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை			

(i)	நிதிப்பிரமாணம் 571	கூட்டுப் பெறுமதி ரூபா 16,626,979 ஆன 02 வருடங்களை விஞ்சிய நிறுத்தி வைத்தல் பணம் மற்றும், கேள்வி காப்புறுதி மற்றும் செயலாற்றல் காப்புறுதி தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	கேள்வி காப்புறுதி கூடிய விரைவில் விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நிதிப்பிரமாணம் 756	மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கிரயம் ரூபா 350,821,276 ஆன நூலகப் புத்தகங்கள் தொடர்பாக இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	ஆண்டின் போது நூலகம் 2024 இன் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளாது இருந்ததுடன் 2025 ஆம் ஆண்டின் போது மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(iii)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5)	2019 முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது வழங்கப்பட்டிருந்த கூட்டு மொத்தமான ரூபா 1,089,952 செயல் நிமித்த உபகட்டு நிதி 33 செயல் நிமித்த உபகட்டுநிதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	அறிவிக்காமல் சேவையில் இருந்து விலகிச் சென்ற ஊழியர்கள் உபகட்டு நிதி சேமலாப நிதியத்தில் விடுவிக்கும் போதும் 2023 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 30,090 செலுத்துதல் தொடர்பாக விசாரணைகள் முடிவடைந்த பின்னரும் 2024 ஆம் ஆண்டின் முற்பணங்களில் இருந்து அநேகமானவை தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி முற்பணத் தொகையும் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	மேற்படி
(iv)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட	மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை எதிர்வரும் ஆண்டின் மார்ச் 31	சமர்ப்பிக்கப்படாத 03 பிரிவுகளின் அறிக்கைகளில் சரியான தன்மையை பரீட்சித்து விரைவாக சமர்பபித்தற்கு	மேற்படி

	நிதிப்பிரமாணம் 756(6)	ஆந் திகதிக்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும் 28 பிரதேச நிலையங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் 03 பிரிவுகளின் பெறுமதி ரூபா 16,707,354 ஆன பாடநெறி பொருட்கள், வரைதல் உபகரணங்கள் மற்றும் ஏனைய இருப்பு மெய்மையாய்வு அறிக்கை இதுவரையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	நடவடிக்கை எடுக்கப்படும்.	
(இ)	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7.6 ஆம் பிரிவு	1984 முதல் 2024 ஆம் ஆண்டு வரையான கால எல்லையில் பிணை முறி உடன்படிக்கைகளை மீறிய 44 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கூட்டு மொத்தமான ரூபா 284,510,353 மீதி உரிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அல்லது பிணையாளர்களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	06 உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணை முறிகளின் பெறுமதி சேமலாப நிதியத்தில் இருந்தும், மேலும் சில தரப்பினரின் அறவிடல்கள் அவரின் விருப்பத்தைப் பெற்று சேமலாப நிதியத்தில் இருந்தும் மற்றும் பணிக் கொடைகளில் இருந்தும் 04 உத்தியோகத்தர்களுக்கு சட்டத்தின் மூலமும் பிணை முறிகளை மீறி பத்து வருடங்களை விஞ்சிய 13 உத்தியோகத்தர்களின் சேமலாப நிதியத்தில் உள்ள மீதியில் அவர்களின் விருப்பக் கடிதத்துடன் அறவிவதற்கான கடிதம் ஒன்று அமைச்சரவை அங்கீகாரத்திற்கு அனுப்புவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு	தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

			அனுப்பப்பட்டுள்ளதுடன் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு மீள் நிளைவூட்டல் அனுப்பப்பட்டுள்ளது.	
(ஈ)	1978 திசெம்பர் 19 ஆம் திகதிய இலக்கம் 842 என்ற திறைசேரி சுற்றறிக்கை	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிரயம் ரூபா 19,788,066,126 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் கிரயம் ரூபா 29,626,511 ஆன கற்பசைன் சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	கணனி முறைமையில் நிலையான சொத்துப் பதிவேடு செயற்படுத்த முடியாது இருந்த போதும் இறுதிக் கணக்கு அறிக்கைகளில் விரிவான பட்டோலைகளில் குறிப்புக்களின் மூலம் சகல தகவல்களும் வழங்கபப்பட்டுள்ளது.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	2023 சனவரி 18 ஆந் திகதிய இலக்கம் BD/HRD/126/214/ 19/2023 என்ற திறைசேரி சுற்றறிக்கை	பிணை முறி உடன்படிக்கைகளை மீறியதன் அடிப்படையில் நடப்பாண்டின் போது அறவிடப்பட்ட ரூபா 12,693,868 தொகை மற்றும் அதற்கு முன்னர் கிடைத்த ரூபா 169,105,107 தொகைகள் திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	பல்கலைக்கழக உடன்படிக்கை மீறியத்தன் அடிப்படையில் பெறப்படும் வருமானம் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை 737 இன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	திறைசேரி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,209,721,310 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 726,456,883 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 483,264,427 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பு மாணவர் வருமானம் ரூபா 612,712,154 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மொத்த ஒப்பந்தப் பெறுமதி ரூபா 378,852,836 + VAT ஆன சுகாதார விஞ்ஞான பீடத்தின் 05 மாடிகளை	சகல ஒப்பந்தங்களையும் நீடிக்கும் பரிந்துரை உபவேந்தரிடம் இருந்து	உடன்படிக்கையின் பிரகாரம் திட்டமிடப்பட்ட காலப் பகுதியில் நிர்மாணங்களை

உடைய கட்டிடத்தை திட்டமிடல் மற்றும் நிர்மாணித்தல் (Design & Build) இன் கீழ் 2022 செப்தெம்பர் 19 ஆந் திகதி வேலைகள் பூர்த்தி செய்வதற்கு குறிபப்பிப்பட்டிருந்த போதிலும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் ஒப்பந்ததின் வேலைகள் முடிவடைந்து இருக்கவில்லை. 2023 சனவரி 25 ஆந் திகதிய நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சரின் அவதானிப்பின் பிரகாரம் பெறுகைக் குழுவினதும் தொழில் நுட்பக் குழுவினதும் பரிந்துரையைப் பெறப்படாமல் இழப்பீடாக ஒப்பந்தகாரருக்கு ரூபா 127,624,573 (VAT உடன்) செலுத்தப்பட்டிருந்தது.	பெறப்பட்டதுடன் 2025 பெப்ரவரி 28 ஆந் திகதி முதல் மிகுதி நாட்களுக்காக பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தகாரார் நாட்டில் காணப்பட்ட நிலைமை அமைச்சின் பரிந்துரையின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட விலை முரண்கள் தொடர்பாக பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்ட மூன்று நபர்களைக் கொண்ட குழுவினால் அது பரீட்சித்து கொடுப்பனவுக்காக பரிந்துரை வழங்கப்பட்டதுடன் அதற்காக பெறுகைக் குழுவின் அங்கீகாரமும் பெறப்பட்டிருந்தது. இதனை செலுத்தும் போது ஒப்பந்தகாரருக்கு ஒரே தடவையில் செலுத்தாது இருந்ததுடன் ஒப்பந்த நிர்மாணத்தின் குறுங்கால இலக்கை வழங்கி அதன் பிரகாரம் சதவீதமாக செலுத்தப்பட்டிருந்தது.	பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் விலை முரண்களை செலுத்தும் போது பெறுகைக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் பரிந்துரையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**	**பரிந்துரைகள்**
விஞ்ஞான ரீதியான கண்காட்சிக்கு அனுப்புதல், துறைசார்ந்த ஆராய்ச்சிகள் மற்றும் புத்தாக்கங்களை பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தல் நோக்கங்களுக்காக பயன்படுத்தும் எதிர்பார்ப்பில் 2023 ஏப்ரல் மாதத்தில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த கிரயம் ரூபா 9,989,000 ஆன நடமாடும் ஆராய்ச்சிக் கூடத்திற்காக தயாரிக்கப்பட்ட பேருந்து வண்டி 02 வருட காலத்தில் 404 கிலோ மீற்றர் மாத்திரம் ஓடப்பட்டு சில சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் விஞ்ஞான ரீதியான	ஓட்டப்பட்ட கிலோமீற்றர் எண்ணிக்கையின் பிரகாரம் செயலாற்றலை அளவிடல் நியாயமில்லாதிருந்ததுடன் எவ்வளவு மாணவர்கள் கற்றிருந்தனர் அல்லது பல்வேறு பொதுமக்கள் கண்காட்சிக்கு வருகைதந்த பொது மக்களின் எண்ணிக்கையை விட சிறந்த செயலாற்றல் குறிகாட்டியாக இருந்தமை மற்றும் இந்த நடமாடும் ஆராய்ச்சிக் கூடத்தை பயன்படுத்தி கடந்த	கொள்வனவு செய்யப்பட்ட நோக்கத்திற்காக ஆக்கபூர்வமானதாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கண்காட்சிகளுக்காக அனுப்பப்பட்தன் காரணமாக அந்த பேருந்து வண்டி குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.	ஆண்டில் 300 மாணவர்களுக்கு மேற்பட்ட அளவில் கற்பித்தல் நடவடிக்கைகளும், பல்வேறு பாடசாலைகளுக்கு எடுத்துச் செல்லலும், பொது மக்கள் கண்காட்சிகளிலும் பங்கு பற்றி இருந்தனர். அதன் போது 100 மாணவர்களுக்கு மாத்திரம் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்ததுடன் தொடர்ந்தும் தேசிய விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனம் போன்ற நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி இந்த நடமாடும் ஆராய்ச்சிக் கூடத்தை அதிகமாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2021 நவம்பர் 16 ஆந் திகதிய திறைசேரி செயலாளரின் இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க விநியோகிக்கப்பட்ட நிறுவனம்சார் நல்லாளுகை தொடர்பான வழிகாட்டியின் 2.3 அத்தியாயம் மற்றும் இணைப்பு I இன் பிரகாரம் பல்கலைக்கழகம் வருடாந்தம் தயாரிக்கின்ற செயல் நடவடிக்கைத் திட்டத்திற்குப் பதிலாக 05 வருடங்களுக்கு தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ஒவ்வொரு செயற்பாடுகளுக்காகவும் ஆண்டில் இலக்கிடப்பட்ட காலம் மற்றும் ஒவ்வொரு செயற்பாடுகளுக்காவும் செலவாகும் என எதிர்பார்க்கும் செலவினங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.	நிறுவனம்சார் நல்லாளுகை தொடர்பான வழிகாட்டியின் இணைப்பு I இன் பிரகாரம் கால அட்டவணை மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயங்களை உள்ளடக்கிய செயல் நடவடிக்கைத் திட்டம் மிக விரைவாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படும்.	நிறுவனம்சார் நல்லாளுகை தொடர்பான வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.